දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 2784832

ලේකම් / செயலாளர் / Secretary } 2784811

කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50 Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ……………………………

අධ්‍යාපන අමාත්‍යාංශය

கல்வி அமைச்சு

**Ministry of Education**

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල

'இசுருபாய' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பத்தரமுல்ல

"Isurupaya", Sri Jayawardhanapura Kotte Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. } ED/01/26/07/03/01

දිනය / திகதி / Date } 2012-08-27


**சுற்றிக்கை இலக்கம் : 2012/24**

அனைத்து மாகாண கல்விச் செயலாளர்கள்,

அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,

அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,

அனைத்து கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் / உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்.

**<u>சூரிய சக்தியில் இயங்கும் கணினி மையங்களை பாராட்டும் விதமாக பயன் படுத்தல்.</u>**

2005 ஆம் ஆண்டில் கிராமப் புறங்களில் அமைந்துள்ள 100 பாடசாலைகளுக்கு சூரிய சக்தியால் இயங்கும் 10 கணினிகளைக் கொண்ட கணினி மையங்களை வழங்கி புதிய மாதிரி ஆரம்ப பாடசாலைகளை மேம்படுத்தும் வேலைத் திட்டத்தினை Solar Photovoltaic Aided Computer Education (SPACE) என்ற செயற்றிட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தினோம்.

அந்த கணினி மையங்களுக்கு வழங்கப்பட்ட கணினிகளின் உத்தரவாத காலம் முடிந்து விட்டது. அது போலவே, சூரிய கலச் சேவையை வழங்கிய நிறுவனம் இந்த மையங்களுக்கு வழங்கியிருந்த துணைக் கருவிகளை (Solar Inverter Model) இறக்குமதி செய்வதில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால், உரிய கணினி மையங்கள் பாராட்டுப் பெறும் வண்ணம் இயங்கச் செய்வதற்காக கீழ் வரும் செயல் முறையை பின்பற்றும் பொருட்டு இந்த சுற்றிக்கை விடுக்கப்படுகின்றது.

(1) சூரிய கல முறைமை செயற்படாது காணப்படும் எனினும் தற்பொழுது மின்சார வசதி அருகில் இருக்கும் பெறும் பாடசாலை கணினி மையங்களுக்கு மின்சார இணைப்ப் பெற்றுக் கொடுத்தல்.

a) இந்தச் செயற்பாட்டின் முதல் கட்டமாக சூரிய கல முறைமை நிறுவப்பட்டுள்ள 53 பாடசாலை அதிபர் அலுவலகங்களுக்கு மின்சாரம் பெற்றுக் கொடுக்கப்படும் அந்த அலுவலகங்களில் இருந்து கணினி மையங்களுக்கு மின்சார நீட்சி (Power Extension) பெற்றுக் கொள்வதற்கு அதிபர்மாருக்கு அனுமதி பெற்றுக் கொடுத்தல்..

b) இரண்டாம் கட்டமாக அவ்வாறு மின்சார நீட்சி பெற்றுக் கொள்வதற்குத் தேவையான மின்சார உபகரணங்களை ( D-board, Main Switch, Load Wire, etc.) கொள்வனவு செய்தல் மற்றும் இந்த மையங்களுக்கு தடையற்ற மின்சாரம் வழங்கல் அலகு ( UPS ) பெற்றுக் கொடுப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்தல் ஆகியன மாகாண திணைக்களம் ஊடாக மேற் கொள்ளப்படும்.

(2) மின்சாரத்தால் இயங்கிவரும் பாடசாலை கணினி மையங்களில் உள்ள பயன்படுத்தக் கூடிய சூரியக் கல முறைமை உதிரிப் பாகங்கள், மின்சாரம் பெறுக்கொள்ள இயலாத பகுதிகளில் அமைந்துள்ள மையங்களில் உள்ள சூரியக் கல முறைமை உதிரிப் பாகங்களைத் திருத்துவதன் பொருட்டு எடுத்துக் கொள்ளப்படும். அத்துடன் அந்த உதிரிப் பாகங்கள் இரண்டாவதாக்க் குறிப்பிட்ட பாடசாலைக்கு எடுத்துச் செல்லல்.

(3) மேலே குறிப்பிடப்பட்ட திருத்துதல் வேலைகளைச் செய்து கொள்வதற்கு கல்வி அமைச்சின் ஊடாக வன்பொருள் மற்றும் இலத்திரனியல் பயிற்சி வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

எஸ். எம். கோட்டாபய ஜயரத்ன.

செயலாளர்,

கல்வி அமைச்சு.

படி: 1. மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப பணிப்பாளர்.

2. வலய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப பணிப்பாளர்.